## குடிநீர் விநியோகம் தொடர்பான புகார்களைத் தெரிவிக்கக் கட்டுப்பாட்டு அறை

## பத்திரிகைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை வழக்கமான அளவை விடக் குறைவாக பெய்துள்ளதையடுத்து கிராமப் புறங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் தொடர்பாக பொது மக்கள் மாவட்ட நிர்வாகத்துக்குப் புகார்கள் தெரிவிக்க ஏதுவாக ஊராட்சி ஒன்றிய அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு வட்டார அளவில் கட்டுப்பாட்டு மையங்கள் (Block Cell) ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடிநீர் விநியோகம் குறித்த பொது மக்களின் புகார்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள கட்டுப்பாட்டு மையம் தொடங்கப்பட்டு, தகவல் தொடர்புக்கென தொலைபேசி /கைபேசி –வாட்ஸ்ஆப் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பொது மக்கள் கீழ் காணும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு, தங்கள் புகார்களைத் தொலைபேசி மூலமாகவோ குறுஞ்செய்தியாகவோ அல்லது வாட்ஸ் ஆப் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

| | | |
|---|---|---|
| தொலைபேசி எண் | - | 044 – 27238870 |
| செல்பேசி எண் | - | 9442571882 / 7402606091 |
| வாட்ஸ் ஆப் | - | 7397562972 |

20.01.17

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.